
# நீ மனிதரை வஞ்சிக்கிறவன்





**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: **ஊதாரி**, ஆகஸ்டு 27, 1950, கிளீவ்லாண்ட், ஓகியோ, அமெரிக்கா

**என் அன்பான நண்பரே, நீங்கள் இந்த சரீரம் மற்றும் இந்த ஜீவியத்தின் கடைசி மூச்சு காற்றிடத்தில் வரும்போது, அந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகள் நிலை நிற்கமாட்டாது என்பதை நீங்கள் கண்டுக்கொள்வீர்கள். அந்த காரியங் களைக் கொண்டு ஜீவிப்பது நல்லதுதான், ஆனால் அவைகளைக் கொண்டு நீங்கள் மரிக்க முடியாது...**

நான் யூகிக்கிறேன், என்னுடைய இந்த வயதில், இந்த ஊழியத்தில், என் வயதை உடையவர்கள் - மரித்துக் கொண்டிருக்கின்ற அநேக ஜனங்களின் அருகில் நான் அனேகமாக, இருந்திருக்கிறேன், ஏனென்றால் மரித்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக நான் மிகவும் அதிகமாக அழைக்கப்பட்டிருக்கிறேன்.

13. சில நாட்களுக்கு முன்னர், எங்களுடைய பட்டணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வாலிப ஸ்திரீ பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தை பெற்றிருந்தாள். அவள் கூடாரத்திற்கு வருவாள். பட்டணத்திலுள்ள வேறொரு வாலிபப்பெண் மிகவும் பிரபலமான வளாய் இருந்தாள். அவள் (இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும், பாதுகாப்பையும் மறுதலித்த, நவீன மாதிரியான மதக்குழுவை சேர்ந்தவர்களாய் இருந்தாள். மேலும் எங்களை, ஒரு வழக்கத்திற்கு மாறான மதநம்பிக்கை உடையவர்கள் என்றும் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள் என்றும் கூறினர். ஏனெனில் நாங்கள் கிறிஸ்துவினுடைய இரட்சிக்கும் கிருபையில் விசுவாசம் கொண்டிருந்தோம்.

ஒரு பரிசுத்த உருளையாய் இருப்பதற்கு அதுவே அவசியமாய் இருக்குமானால், பின்பு நான் அவர்களில் ஒருவனாயிருக்கிறேன். (காரணம்) நான் இரத்தத்தில் விசுவாசம் வைத்திருக்கிறேன்.

இந்த வாலிப ஸ்திரீ நடனங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் போனாள், ஆனால் அவள் சபையில் ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள். சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தை மறுதலித்து, அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது என்று கூறினது. அது 1900 வருடங்களுக்கு முன்பே உலர்ந்து போய்விட்டது

என்று மேய்ப்பர் சொன்னார்: ஒரு சமூக சுவிசேஷம். போகப்போக இந்த அழகான தோற்றம் கொண்ட சிறு பெண் சில வாலிப பையன்களுடன் வெளியே சென்றாள்.

இந்த மற்ற சிறு பெண்ணோ மேலே கூடாரத்திற்கு வருவாள். அவள் பழைமை நாகரீகமான வஸ்திரங்களை உடுத்தினாள். அவள் தன்னுடைய மயிரை அப்படியே எவ்வளவு முடியுமோ அவ்வளவு இருக்கமாக சீவி, நீங்கள் அழைக்கிற இந்த ஒப்பனை அலங்காரம் எதுவும் அவளுடைய முகத்தில் கொண்டிருக்காமல் அல்லது அவர்கள் உடுத்துகிற அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் அவள் உடுத்தாமல் தெருவில் இறங்கி செல்வது வழக்கம். அவள் தெருவில் இறங்கி போவாள்.

ஆம், அது உண்மையே; நாம் அதற்கு விரோதமாக போதிக்கிறோம். சுவிசேஷத்திற்கு முக்கிய கவனத்தைக் கொடுக்கும்படிக்கு தேவன் போதகர்களுக்கு உதவி புரிவாராக. சீமாட்டிகளே கவனியுங்கள், ஒரு மனிதனை சந்திக்கும்படி தனக்குத்தானே வர்ணம் தீட்டிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ எப்பொழுதாவது வேதத்தில் இருப்பாளா னால், அது ஒரு ஸ்திரீ மாத்திமே, அதுதான் யேசபேல்; தேவன் அவளை நாய்களுக்கு

உணவாக்கினார். எனவே அவர்கள் வர்ணம் தீட்டிக்கொண்டிருப்பதை நீங்கள் காணும்போது, “எப்படி இருக்கிறீர்கள், செல்வி நாய்க்கறியே?” என்று கூறுங்கள். அது மிகவும் சரியே: தேவன் அவளை நாய்களுக்கு இரையாக்கினார். நீங்கள் அவளைப் போல இருக்க விரும்புவதில்லை.

எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமோ அவ்வளவு அழகாக தேவன் உங்களுடைய வழிகளிலே உங்களை அழகுள்ளவர்களாக்குவார். ஆனால் இன்னும் நம்முடைய பரிசுத்த சபையானது அப்படிப்பட்டதான காரியங்களை விட்டுக் கொடுக்கிறது. அது உண்மை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் மறுபடியும் உங்களை வெட்டி சரிப்படுத்தும் அந்த பழைய வரிசையில் திரும்பி வந்து, சுவிசேஷத்திற்கு திரும்பி வருவது நல்லது.

14. இப்பொழுது கவனியுங்கள். இந்த வாலிபப்பெண், அவள் அப்படியே தன் ஒவ்வொரு வழியிலும் செய்துக் கொண்டிருந்தாள், நடனங்களுக்கும், விருந்துகளுக்கும் மற்றவைகளுக்கும் வெளியே சென்றாள். அவள் வியாதியால் தாக்கப்பட்டாள். காரியம் என்னவென்று அவள் புரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் மருத்துவர் அவளிடம் வந்தபோது,

அவள் ஒரு பால்வினை நோயை கொண்டிருந்தாள். அவளுடைய நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. கொஞ்சம் முயற்சித்துப் பார்த்தார்கள், ஆனால் அது கிரியை செய்யவில்லை.

இந்நிலையில் அவள் நேராக பரலோகத்திற்கு போவாள் என்றும், ஏனெனில் அவள் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள் என்றும் மேய்ப்பர் அவளிடம் கூறினார். எனவே அவர்கள் அனைவரும் அவள் போவதையும், கர்த்தருடைய தூதர்கள் அவளை அழைத்துச் செல்ல வருவதை யும் காண அறைக்குள் கூடிவந்திருந்தனர்.

அதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாக நான் அப்படியே தெருவில் கடந்து சென்றேன். மேய்ப்பர் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்தார், அழகான பெரிய வீடு, அருமையான ஜனங்கள். அவர் அப்பொழுதுதான் அறையை விட்டு வெளியே வந்திருந்தார். ஞாயிறு பள்ளி வகுப்பார் அனைவரும் அவள் பரலோகத்திற்கு போவதை காணும்படி உள்ளே பாடல்களை பாடிக் கொண்ருந்தனர். மேய்ப்பர் புகை பிடிக்கும்படி நடந்து வெளியே கூடத்திற்கு வந்தார். மரணம் அப்பெண்ணை தாக்கியபோது, அவள் மரண பீதியில் அலறத் தொடங்கினாள், அவள், “அந்த பெண் எங்கே?” என்றாள்.

அவர்கள், “எந்தப் பெண்?” என்றனர். அவள், “உன்னுடைய வகுப்பார் எல்லாரும் இங்கே உள்ளனரே” என்றாள்.

அவளோ, “நான் அவர்களை குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. என்னுடைய ஆத்துமாவை குறித்து என்னிடம் வழக்கமாக பேசுகிற, அவளுடைய பெயரைச் சொல்லி, அங்கே மேலேயுள்ள அந்த கூடாரத்தைச் சேர்ந்த அந்த பெண்ணைக் குறித்து தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்” என்றாள். “போய் அவளை அழைத்து வாருங்கள்” என்று சொன்னாள்.

15. அவர்கள் மேய்ப்பரிடம் சென்றனர், அவர் உள்ளே ஓடி வந்தார். அவர், “இப்பொழுது, தேனே கவனி, நாங்கள் மருத்துவரை அழைக்கிறோம். அவர் உனக்கு ஊசி போடுவார். நீ சிறிது பதற்றமடைந்துள்ளாய்” என்றார்.

அவள், “நான் பதற்றமடையவில்லை. **நீ மனிதரை வஞ்சிக்கிறவன்.** நான் இழக்கப்பட்டு நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன், ஏனெனில் நீ எனக்கு அவ்வாறு தான் போதித்தாய்” என்றாள். அந்த பெண் இழக்கப்பட்டவளாய், எது சரியானதென்று

அவளிடம் கூற முயற்சித்துக் கொண்டிருந்த மற்ற பெண்ணிற்காக அலறிக் கொண்டே மரித்து, தேவனைச் சந்திக்கச் சென்று விட்டாள்.

**பார் சகோதரனே, இந்த வாழ்க்கை பயணத்தின் முடிவிற்கு நீ வரும்போது, நீ தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்தமான, சுத்தமான ஒரு ஜீவியம் ஜீவித்திருக்க வேண்டுமென்று நீ விரும்புவாய். அதை ஞாபகத்தில் வைத்திருப்பதில் நிச்சயமாயிருங்கள்.**

இப்பொழுது, உங்களுடைய சபையைக் குறித்து - நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்களாய் இருந்தாலும், தேவனுக்கு அது காரியமல்ல. உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதுதான் காரியம். அது சரியே. நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்கள் என்று தேவன் உங்களிடம் கேட்கப் போவதில்லை; உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதைத்தான் தேவன் பார்க்கப்போகிறார்.